www.Padasalai.Net www.CBSEtips.in

லொயோலா

# ஈசி கணக்குப்பதிவியல்

# 11

அரசு புதிய பாடத் திட்டத்தின்படி விடைக் குறிப்பு (Key) அடிப்படையில் தயாரிக்கப்பட்ட சிறப்பு நூல்.

www.Padasalai.Net

Loyola Publications
Vivek Illam, No. 19, Raj Nagar, N.G.O. 'A' Colony,
Palayamkottai, Tirunelveli - 627 007.
Ph: 0462 - 2553186
Cell : 94433 81701, 94422 69810, 90474 74696
81110 94696, 89400 02320, 89400 02321

₹. 315/-

Less Strain Score More

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

Published by

**Copy right : © LOYOLA PUBLICATION.**

All rights reserved. No part of this publication may be reproduced or distributed in any form or by any means, or stored in a data base or retrieval system without the prior written Permission of the publisher.

www.Padasalai.Net

**Authors:**

**Mr. S.Syed Shahul Hameed Raja,** M.Com., M.Ed., M.Phil.

**Mr. G.Justin Sahaya Raj,** M.Com., B.Ed., M.Phil.

**Mr. J.Samson William,** M.A., B.Ed.

★

Loyola Publications

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# உங்களோடு

அன்பு நிறை தம்பி தங்கையரே!

வாழ்த்துக்கள்,

- **11 ஆம் வகுப்பு கணக்குப்பதிவியல்,** பாடம் கடினமானது! இதை எளிமையாக்கும் பொருட்டு அரசு பொதுத் தேர்வில் விடைத்தாள்கள் திருத்தப்படும் (Key) முறை, பாடத்தை எளிமையாக படிக்கும் முறை, வினாக்களுக்கு மிகச் சரியான பதிலை அளிக்கும் முறை ஆகியவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டதே இந்த **லொயோலா ஈசி கணக்குப்பதிவியல் வழிகாட்டி**
- கூடுதல் ஒரு மதிப்பெண் வினாக்கள் அரசுத் தேர்வில் கேட்கப்படும் முறையிலும் **மற்றும் போட்டித் தேர்வுகளில் கேட்கப்படும் வினா அமைப்பின் படி கொடுக்கப்பட்டுள்ளது.**
- ஒவ்வொரு பாடத்திலும் எவ்வித கேள்விகள் கேட்டாலும், அதற்கு தகுந்த விடை எழுதும் விதமாக கொடுக்கப்பட்டுள்ளது.
- பாடங்களை மாணவர்கள் எளிதில் புரிந்துகொண்டு தேர்வில் வரைய மிக எளிமைப்படுத்தப்பட்டுள்ளது
- **ஒவ்வொரு பாடத்திலும் கொடுக்கப்பட்டுள்ள முழு கருத்துக்களையும் மிக எளிமையாக்கப்பட்டு வினா மற்றும் விடை வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதை புரிந்து படித்தால் அரசுத் தேர்வில் கேட்கப்படும் எவ்வித கேள்விகளுக்கும் விடை எழுதலாம்.**
- இப்புத்தகத்தை எழுதிய நாங்கள் அடைந்த மகிழ்ச்சியை விட வாங்கிப் பயிலும் நீங்கள் தேர்வில் 100% மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெறுவதே மிக்க மகிழ்ச்சியைத் தரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி
வாழ்க வளமுடன்

★

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# பொருளடக்கம்

## கணக்குப்பதிவியல்


| அலகு | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | கணக்கியல் அறிமுகம் | 5 |
| 2 | கணக்கியலின் கருத்துக் கட்டமைப்பு | 13 |
| 3 | முதன்மைப் பதிவேடுகள் | 19 |
| 4 | பேரேடு | 57 |
| 5 | இருப்பாய்வு | 105 |
| 6 | துணை ஏடுகள் – I | 122 |
| 7 | துணை ஏடுகள் – II | 151 |
| 8 | வங்கிச் சரிகட்டும் பட்டியல் | 184 |
| 9 | பிழைத் திருத்தம் | 206 |
| 10 | தேய்மானக் கணக்கியல் | 229 |
| 11 | முதலின மற்றும் வருவாயின நடவடிக்கைகள் | 257 |
| 12 | தனியாள் வணிகரின் இறுதிக் கணக்குகள் – I | 266 |
| 13 | தனியாள் வணிகரின் இறுதிக் கணக்குகள் – II | 289 |
| 14 | கணினிமயக் கணக்கியல் | 326 |
| அரசு துணைத்தேர்வு – ஆகஸ்ட் 2022 | | 333 |
| அரசு பொதுத் தேர்வு – மார்ச் 2023 | | 339 |


★

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

அலகு 1

# கணக்கியல் அறிமுகம்

## பகுதி I - புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. **நிதிநிலைக் கணக்கின் அடிப்படையாக விளங்குவது** HY - 2018, 2019 | மார்ச் -2019 | ஆகஸ்ட் -2022

அ) சமூகக் கணக்கியல் ஆ) காரியதரிசிகளின் கணக்கியல்

இ) மேலாண்மைக் கணக்கியல் ஈ) பொறுப்பு கணக்கியல்

**விடை : ஆ) காரியதரிசிகளின் கணக்கியல்**

2. **பின்வருவனவற்றுள் எது கணக்கியலின் முதன்மை நோக்கம் ஆகாது.** செப் -2020 | மே -2022

அ) நடவடிக்கைகளை முறையாகப் பதிவு செய்தல்.

ஆ) வணிகத்தின் இலாபம் ஈட்டும் திறனை அறிந்து கொள்ளுதல்

இ) நிறுவனத்தின் நிதி நிலையை அறிந்து கொள்ளுதல்

ஈ) வரிவிதிக்கும் அதிகாரிகளிடம் வரித்தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல்

**விடை : ஈ) வரிவிதிக்கும் அதிகாரிகளிடம் வரித்தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல்**

3. **பின்வருவனவற்றில் எது கணக்கியலின் பிரிவுகளில் இடம் பெறாது** GMQ - 2018

அ) நிதிநிலைக் கணக்கியல் ஆ) மேலாண்மைக் கணக்கியல்

இ) மனிதவளக் கணக்கியல் ஈ) மேற்கண்ட ஏதுமில்லை

**விடை : ஈ) மேற்கண்ட ஏதுமில்லை**

4. **ஒரு வணிகத்தின் நிதிநிலையை அறிந்து கொள்ள அடிப்படையானது** First Mid - 2018 | QY - 2018 | ஜுன் -2019 | மார்ச் -2023

அ) குறிப்பேடு ஆ) இருப்பாய்வு

இ) இருப்பு நிலைக் குறிப்பு ஈ) பேரேடு **விடை : இ) இருப்பு நிலைக் குறிப்பு**

5. **நிதித்தகவல்களின் அகப்பயனாளராகக் கருதப்படுபவர் யார்?** HY - 2018 | QY - 2019 | ஜுன் -2019

அ) கடனீந்தோர் ஆ) பணியாளர் இ) வாடிக்கையாளர் ஈ) அரசு

**விடை : ஆ) பணியாளர்**

### II. மிகக் குறுகிய வினாக்கள்

1. **கணக்கியலை வரையறு.** First Mid - 2018 | செப் -2020 | மே -2022

➢ அமெரிக்ககணக்கியல் கழகத்தின் கூற்றின்படி “கணக்கியல் என்பது பொருளாதார தகவல்களைக் கண்டறிந்து அளவிட்டு, தகவல் தெரிவிக்கக்கூடிய ஒரு செயல்பாடாகும்.

➢ இதன்மூலம் தகவல்களைப் பயன்படுத்துவோர் தக்கதீர்வு காண்பதற்கும் மற்றும் முடிவெடுப்பதற்கும் வகை செய்கிறது.

2. **கணக்கியலின் ஏதேனும் இரண்டு பணிகளைக் கூறுக.** GMQ - 2018 | மார்ச் -2019 | ஆகஸ்ட் -2022

**I. அளவிடுதல் :**

➢ வணிக நடவடிக்கைகள் குறித்து முறையான ஆவணங்களை வைத்திருத்தல் பதிவு செய்தல், எடுத்தெழுதுதல், கடைசியான இறுதிக் கணக்குகளைத் தயாரித்தல் ஆகியவையே கணக்கியலின் முதன்மையான பணியாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**II. முன்னறிதல் :**

- வணிக நிறுவனங்களின் எதிர்கால செயல் திறன் மற்றும் நிதிநிலை பற்றி கணக்கியலின் பல்வேறு கருவிகளின் மூலம் முன்கூட்டியே அறிந்து கொள்ளுதல்.

**3. கணக்கியல் செயல்பாட்டிலுள்ள படிநிலைகள் யாவை?** HY - 2019

i) நடவடிக்கைகளை இனம் கண்டு குறிப்பேட்டில் பதிவு செய்தல்

ii) எடுத்தெழுதுதல் மற்றும் இருப்புக் கட்டுதல்

iii) இருப்பாய்வு தயாரித்தல்

iv) வியாபாரக் கணக்கு தயாரித்தல்

v) இலாபநட்டக் கணக்கு தயாரித்தல்

vi) இருப்பு நிலைக்குறிப்பு தயாரித்தல்

**4. கணக்கியல் தகவல்களில் ஆர்வமுடைய நபர்கள் யாவர்?** QY - 2019 மார்ச் -2023

- உரிமையாளர்கள், பணியாளர்கள், நிர்வாகம் (அகப் பயனீட்டாளர்கள்)
- முதலீட்டாளர்கள், வாடிக்கையாளர்கள், கடனீந்தோர், வரிவிதிப்பு அதிகாரிகள், ஆராய்ச்சியாளர்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் அரசாங்கம் (புறப் பயனீட்டாளர்கள்)

**5. கணக்கியல் தகவல்களை பதிவு செய்யும் எவையேனும் இரண்டு அடிப்படைகளின் பெயர்களைத் தருக.** HY - 2018

பொதுவான பயன்பாட்டிற்காக கணக்கியலில் கீழ்கண்ட மூன்று அடிப்படைகள் உள்ளன.

1. ரொக்க அடிப்படை
2. நிகழ்வு அடிப்படை அல்லது வணிக அடிப்படை
3. கலப்பு அல்லது கலப்பின அடிப்படை

## III. குறுகிய வினாக்கள்

**1. கணக்கியலின் பொருளை விளக்குக.** QY - 2018

கணக்கியல் என்பது நிதியியல் தகவல்களை இனம்காணுதல், அளவிடுதல், பதிவு செய்தல் வகைப்படுத்துதல், சுருக்கமுணர்தல், உய்த்துணர்தல் மற்றும் தகவல்களைத் தெரிவித்தல் போன்ற முறையான செயல்பாடுகளை உள்ளடக்கியது.

**2. கணக்கியலின் பிரிவுகளை சுருக்கமாக கூறுக.** First Mid - 2018 ஆகஸ்ட் -2022

**1. நிதி நிலைக் கணக்கியல் :**

- இது நிதியியல் நடவடிக்கைகளையும், நிகழ்வுகளையும் பதிவு செய்யக்கூடியது.
- இது வரலாற்றுத் தன்மையுடையது
- ஏற்கனவே நடந்து முடிந்த நடவடிக்கைகளை மற்றும் நிகழ்வுகளை கணக்கேடுகளில் பதிவு செய்து பராமரிப்பதே நிதிநிலை கணக்கியலாகும்.
- இது பயனாளர்கள் முடிவுகள் எடுக்க தேவையான நிதியியல் தகவல்களைத் தருகிறது.

**2. அடக்கவிலைக் கணக்கியல் :**

- பொருட்கள் அல்லது சேவைகளின் அடக்க விலையைக் கணக்கிடுவதற்கு செலவு விவரங்களை சேகரித்து பதிவு செய்து வகைப்படுத்தி, செலவினங்களை ஒதுக்கீடு செய்வது அடக்க விலை கணக்கியல் ஆகும்.
- மேலும் இது செலவுகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் நிர்வாக முடிவுகளை எடுத்தல் போன்றவற்றிற்கான விவரங்களையும் தருகிறது.

**3. மேலாண்மைக் கணக்கியல் :**

கணக்கியல் தகவல்களை நிர்வாகத்திற்கு தருவதன் மூலம் முடிவு எடுப்பதற்கும், நிறுவனத்தின் அன்றாட செயல்பாடுகளுக்கும் துணைசெய்வதே மேலாண்மைக் கணக்கியல் ஆகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**4. சமூகப் பொறுப்பு கணக்கியல் :**

- இது வணிக நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்கள் கணக்கியல் தகவல்களை சமூகத்தின் பார்வையில் வழங்குவதாகும்.
- உதாரணமாக உள் கட்டமைப்பு வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் போன்றவை தெரிவிக்கப்படும்.

**5. மனிதவளக் கணக்கியல் :**

- இது ஒரு நிறுவனம், அதன் மனித வளத்தில் செய்த முதலீடுகளை இனம் காணுதல், அளவிடுதல் மற்றும் அறிவித்தல் ஆகியவற்றைச் சார்ந்ததாகும்.

**3. கணக்கியலின் முக்கியத்துவத்தினை விரிவாக விளக்குக.** மார்ச் -2019 QY - 2019 மார்ச் -2023

**1. முறையான பதிவேடுகள் :**

- அனைத்து நிதிசார்ந்த நடவடிக்கைகளும் கணக்கேடுகளில், முறையாகவும், பொதுவான தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டும் தொகுக்கப் படுகின்றன.

**2. நிதிநிலை அறிக்கைகள் தயாரித்தல் :**

- வருமான அறிக்கை அல்லது இறுதிக் கணக்குகளை, உரிய காலங்களில் தயாரிப்பதன் மூலம் வணிகத்தின் இயக்க முடிவுகளையும், நிதி நிலையையும் அறிய முடியும்.
- இது உரிமையாளர்களுக்கு இலாபத்தை வழங்கவும், வணிகத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு நிதியை அளிக்கவும் உதவுகிறது.

**3. வளர்ச்சியை மதிப்பிடல் :**

- நிதிசார் விவரங்களைப் பகுப்பாய்வு மற்றும் உய்த்துணர்வு செய்வதன் மூலமாக பல்வேறு செயல்களின் வளர்ச்சியை மதிப்பிடவும் பலவீனங்களைக் கண்டறியவும் இயலும்.
- வணிகத்தின் நீர்மைத்தன்மை இலாபத்தன்மை மற்றும் கடன் தீர்க்கும் திறன் ஆகியவற்றின் முழுமையான நிலையினை நிர்வாகத்திற்கு கணக்கியல் அளிக்கிறது.

**4. பயனீட்டாளர்களுக்கு தருதல்**

உரிமையாளர்கள், நிர்வாகம், கடனீந்தோர், பணியாளர்கள், நிதி நிறுவனங்கள் வரிவிதிப்பு அதிகாரிகள் மற்றும் அரசாங்கம் போன்ற பல்வேறு பயனீட்டாளர்களுக்கு கணக்கியல் தகவல்களைத் தருகிறது.

**5. சட்டச் சான்றாக இருத்தல் :**

பொதுவாக நீதிமன்ற வழக்குகளிலும் இதர ஆணையங்களிலும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண கணக்கேட்டுப்பதிவுகள் சான்றாக ஏற்கப்படுகின்றன.

**6. வரி கணக்கிடுதல் :**

வருமானவரி மற்றும் இதரவரிகள் கணக்கிடுதல் மற்றும் செலுத்தலில் கணக்கேடுகள் அடிப்படை ஆதரவாக இருக்கின்றன.

**4. கணக்கியல் தகவல்களில் பின்வரும் பயனீட்டாளர்கள் ஏன் ஆர்வமாக உள்ளனர்?** HY - 2019

**அ) முதலீட்டாளர்கள் ஆ) அரசு**

**அ) முதலீட்டாளர்கள் :**

- ஒரு நிறுவனத்தில், தங்களது நிதியை முதலீடு செய்யும் ஆர்வமுள்ளவர்கள் முதலீட்டாளர்கள்
- தாங்கள் இடும் முதல், இலாபகரமாக தங்களது கைக்கு திரும்ப வரவேண்டும் என நினைப்பது முதலீட்டாளர்களின் இயல்பே.
- எனவே, நிறுவனத்தின் நிதி நிலையை அறிந்து கொள்ளவும், எதிர்கால இலாபம் மற்றும் இடர் ஏற்கும் திறன் போன்றவற்றை தெரிந்து கொள்ளவும் அதிக ஆர்வம் கொண்டிருப்பர்.

**ஆ) அரசு :**

- வணிக நிறுவனங்கள், நாட்டின் அரிதான வளங்களைப் பயன்படுத்துகின்றன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- அரசாங்கம் வணிக நிறுவனங்களின் செயல் திறனை அறிந்து வைத்திருந்தால் மட்டுமே, அரிதான வளங்களை ஒதுக்கீடு செய்தல், வணிகம் மற்றும் தொழில் துறைச் சார்ந்த கொள்கை முடிவுகளை உருவாக்குதல், மானியம் மற்றும் சலுகைகள் வழங்குதல் போன்றவற்றிற்கான முடிவுகளை எடுக்க முடியும்.
- மேற்கண்ட காரணத்தாலேயே. அரசு கணக்கியல் தகவல்களில் அதிகம் ஆர்வம் காட்டுகின்றது.

**5. நவீன வணிக உலகில் கணக்காளரின் பங்களிப்பு பற்றி விளக்குக.** HY - 2018 செப் -2020 மே -2022

**i) ஏடுகளைப் பராமரிப்பவர் :**

- நிதிச் சார்ந்த நடவடிக்கைகளை முறையாக பதிவு செய்து ஏடுகளைப் பராமரிக்கிறார்.
- நிதிநிலை அறிக்கைகளையும் பிற நிதி அறிக்கைகளையும் தயாரிக்கிறார்.

**ii) நிர்வாகத்திற்குத் தகவல்களைத் தருபவர் :**

முடிவுகளை எடுக்கவும் மற்றும் கட்டுப்பாடுகளை விதிக்கவும், நிர்வாகத்திற்குத் தேவையான நிதிச் சார்ந்த தகவல்களை அளித்து உதவுகிறார்.

**iii) வணிகச் சொத்துகளின் காப்பாளர் :**

- சொத்துகளுக்கான பதிவேடுகளைப் பராமரிப்பதன் மூலம், நிர்வாகம் அந்தச் சொத்துக்களைப் பாதுகாத்து கட்டுப்படுத்த முடிகிறது.
- சொத்துகளுக்கான காப்பீடு மற்றும் சொத்துகள் பராமரிப்பைப் பற்றிய ஆலோசனையை நிர்வாகத்திற்கு வழங்குகிறார்.

**iv) நிதி ஆலோசகர் :**

நிதிச் சார்ந்த தகவல்களை பகுப்பாய்வு செய்து, முதலீட்டுக்கான வாய்ப்புகள், செலவைக் குறைப்பதற்கான உத்திகள், எதிர்கால வளர்ச்சி மற்றும் விரிவு படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து, வணிக மேலாளர்களுக்கு ஆலோசனை வழங்குகிறார்.

**v) வரி மேலாளர்**

- குறித்த காலத்தில் வருமானவரி விவரம் தயாரிப்பு செய்தல் மற்றும் வருமானவரி செலுத்துதல் முதலியவற்றை உறுதி செய்கிறார்.
- வரி மேலாண்மை, வரிச் சுமையை குறைத்தல், வரிவிலக்கு பெறுதல் போன்றவற்றில் மேலாளர்களுக்கு ஆலோசனை வழங்குகிறார்.

**vi) பொது தொடர்பு அலுவலர்**

தேவைப்படும் பயனீட்டாளர்களுக்கு கணக்கியல் பகுப்பாய்வு செய்யத் தேவைப்படும் விவரங்களை வழங்குகிறார்.

## பகுதி II - கூடுதல் வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்

**1. வேறுபட்ட ஒன்றைக் கண்டறிக.**

அ) அளவிடுதல் ஆ) முன்னறிதல் இ) ஒப்பிடுதல் ஈ) திட்டமிடுதல்

**விடை : ஈ) திட்டமிடுதல்**

**2. வேறுபட்ட ஒன்றைக் கண்டறிக.**

அ) நிதிநிலை கணக்கியல் ஆ) அடக்கவிலை கணக்கியல்
இ) மேலாண்மை கணக்கியல் ஈ) சமன்பாடு கணக்கியல்

**விடை : ஈ) சமன்பாடு கணக்கியல்**

**3. கணக்கியலின் பணிகள் ...............**

அ) அளவிடுதல் ஆ) முன்னறிதல் இ) ஒப்பிடுதல் ஈ) மேற்கூறிய அனைத்தும்

**விடை : ஈ) மேற்கூறிய அனைத்தும்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**4. உரிமையாளர் தனது சொந்தச் செலவிற்காக எடுக்கும் சரக்குகள் ............ ஆகும்.**

அ) ரொக்கம் ஆ) சரக்குகள் இ) எடுப்பு ஈ) ஏதுமில்லை

**விடை : இ) எடுப்பு**

**5. எது சரியாகப் பொருந்தவில்லை?**

அ) முதல் - உரிமையாளர் முதலிடும் தொகை

ஆ) சான்றுச்சீட்டு - நடவடிக்கைக்கு ஆதாரமாக விளங்குவது

இ) இடாப்பு - சரக்குகளின் விலை அளவு போன்றவைகள்

ஈ) கொள்முதல் - சொந்தப் பயனுக்காக வாங்கியது

**விடை : ஈ) கொள்முதல் - சொந்தப் பயனுக்காக வாங்கியது**

**6. எது சரியாகப் பொருந்துகிறது?**

அ) விற்பனை - சரக்குகளை வாங்குவது

ஆ) வருமானம் - கடனைத் திருப்பிச் செலுத்துவது

இ) தேய்மானம் - நிலைச் சொத்தில் உண்டாகும் படிப்படியான குறைவு

ஈ) வாராக்கடன் - கடனாளியிடம் திரும்பப்பெற இயலும் கடன்

**விடை : இ) தேய்மானம் - நிலைச் சொத்தில் உண்டாகும் படிப்படியான குறைவு**

## II. பொருத்துக

**1. பட்டியல் I உடன் பட்டியலை II ஐப் பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| i | உரிமையாளர்கள் | 1 | புறப்பயனீட்டாளர்கள் |
| ii | முதலீட்டாளர்கள் | 2 | சுற்றுப்புற மாசு |
| iii | மனிதவளக் கணக்கியல் | 3 | மனித வளத்தில் முதலீடு செய்ததை இனம் காணுதல் |
| iv | சமூகப் பொறுப்பு கணக்கியல் | 4 | அகப் பயனீட்டாளர்கள் |

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| (அ) | 4 | 1 | 3 | 2 |
| (ஆ) | 4 | 3 | 2 | 1 |
| (இ) | 4 | 2 | 3 | 1 |
| (ஈ) | 4 | 2 | 1 | 3 |

**விடை : (அ) 4 1 3 2**

**2. பட்டியல் I உடன் பட்டியலை II ஐப் பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| i | அடக்கவிலைக் கணக்கியல் | 1 | நிர்வாகத்திற்குத் தகவல் தருதல் |
| ii | மேலாண்மைக் கணக்கியல் | 2 | நிகழ்வுகளைப் பதிவு செய்தல் |
| iii | நிதிநிலை கணக்கியல் | 3 | பெறுதல், செலுத்தல் |
| iv | ரொக்க அடிப்படை | 4 | செலவுகளைக் கட்டுப்படுத்துதல் |

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| (அ) | 4 | 1 | 2 | 3 |
| (ஆ) | 3 | 2 | 4 | 1 |
| (இ) | 2 | 3 | 1 | 4 |
| (ஈ) | 4 | 3 | 1 | 2 |

**விடை : (அ) 4 1 2 3**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## III. கூற்று மற்றும் காரணம்

**1. கூற்று (A) : உரிமையாளர் தனது சொந்தச் செலவிற்கு வணிகத்தில் ரொக்கம் மற்றும் சரக்குகளை எடுத்தால் அது எடுப்பு ஆகும்.**

**காரணம் (R) : தொழிலிருந்து இவைகளை எடுப்பதால் முதல் குறையும்.**

அ) (A) மற்றும் (R) சரி (R) என்பது (A) என்பதற்கு சரியான விளக்கம்.

ஆ) (A) மற்றும் (R) சரி (R) என்பது (A) என்பதற்கு சரியான விளக்கமல்ல.

இ) (A) சரி (R) தவறு

ஈ) (A) தவறு (R) சரி **விடை : (அ) (A) மற்றும் (R) சரி (R) என்பது (A) என்பதற்கு சரியான விளக்கம்**

## IV. மிகக் குறுகிய வினாக்கள்

**1. குறிப்பு வரைக : i) ரொக்க நடவடிக்கை, ii) கடன் நடவடிக்கை.**

**i) ரொக்க நடவடிக்கை :**

இது உடனடி ரொக்கம் பெறுதல் அல்லது உடனடி ரொக்கச் செலுத்தலை உள்ளடக்கிய ஒரு நடவடிக்கை ஆகும்.

**ii) கடன் நடவடிக்கை :**

இது ரொக்கம் உடனடியாக செலுத்தப்படாத அல்லது பெறப்படாத ஒரு நடவடிக்கை ஆகும். ஆனால், அதற்குப் பின்னர் ரொக்கம் செலுத்தப்படும் அல்லது பெறப்படும்.

**2. முதல் என்றால் என்ன?**

முதல் என்பது ஒரு நிறுவனத்தில் அதன் உரிமையாளர் செய்த முதலீட்டைக் குறிக்கும்.

**3. சான்றுச்சீட்டு என்றால் என்ன?**

- ஒரு வணிக நடவடிக்கைக்கு ஆதாரமான எழுத்து வடிவிலான அல்லது அச்சிடப்பட்ட ஆவணம் சான்றுச் சீட்டு ஆகும்.
- **எடுத்துக்காட்டு :** ரொக்க ரசீது, இடாப்பு, வங்கிச் செலுத்துச் சீட்டு

**4. கணக்கியல் எத்தகைய தகவல்களைத் தருகின்றன?**

- பெற்றிருக்கக் கூடிய வளங்கள்
- பெற்றிருக்கக் கூடிய வளங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன.
- அவற்றின் பயன்பாட்டினால் ஏற்படும் விளைவுகள்.

## V. குறுகிய வினாக்கள்

**1. கணக்கியலின் பண்புகளை எழுதுக.**

- கணக்கியல் ஒரு கலை. ஒரு நிறுவனத்தின் தேவைகளுக்கேற்ப கணக்கியல் முறை மற்றும் கொள்கைகளை வடிவமைக்கவும் முடிவு செய்யவும், கணக்காளரின் திறமையும், சிறப்புத் தேர்ச்சியும் தேவைப்படுகிறது.
- வணிகத்தின் நடவடிக்கைகள் அல்லது நிகழ்வுகள் பண மதிப்பில் பதியப்படுகின்றன.
- வணிக நடவடிக்கைகளைப் பதிவு செய்தல் வகைப்படுத்துதல், சுருக்கமுணர்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் முடிவுகளை உய்த்துணர்தல் போன்றவைகளை உள்ளடக்கியது கணக்கியல் செயல்பாடுகள்.

**2. கணக்கியலின் நோக்கங்கள் யாவை?**

- நிதி நடவடிக்கைகள் மற்றும் நிகழ்வுகள் குறித்த முறையான பதிவேடுகளை வைத்திருத்தல்.
- வணிக நிறுவனத்தின் இலாபம் அல்லது நட்டத்தை கண்டறிதல்.
- வணிக நிறுவனத்தின் நிதிநிலை மற்றும் நிலையை அறிதல்.
- பல்வேறு பயனீட்டாளர்களின் தேவைக்கேற்ப தகவல்களை வழங்குதல்.
- நிறுவனத்தின் சொத்துகளைப் பாதுகாத்தல் மற்றும்
- நிறுவனத்தின் கடன் தீர்க்கும் திறன் மற்றும் நீர்மைத்தன்மையை அறிதல்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**3. கணக்கியல் சுழலின் படிநிலைகளை விளக்குக.**




**4. கணக்கியலின் பணிகளை விளக்குக.**

i) **அளவிடுதல் :**

வணிக நடவடிக்கைகள் குறித்து முறையான ஆவணங்களை வைத்திருத்தல், பதிவு செய்தல், எடுத்தெழுதுதல், கடைசியாக இறுதிக் கணக்குகளைத் தயாரித்தல் ஆகியவையே கணக்கியலின் முதன்மையான பணியாகும்.

ii) **முன்னறிதல் :**

வணிக நிறுவனத்தின் எதிர்கால செயல் திறன் மற்றும் நிதிநிலை பற்றிய கணக்கியலின் பல்வேறு கருவிகளின் மூலம் முன்கூட்டியே அறிந்துகொள்ள முடிகிறது.

iii) **ஒப்பிடுதல் :**

கணக்கியல், நிகழ்ந்த செயல்திறனுடன், திட்டமிட்ட செயல்திறனை ஒப்பிட உதவுகிறது. மேலும், இது கணக்கியல் கொள்கைகளுடன் ஒப்பிட உதவுகிறது.

iv) **முடிவெடுத்தல் :**

திட்டமிடுதல், செயல்திறன் மதிப்பீடு, கட்டுப்பாடு ஆகிய மேலாண்மை பணிகளுக்கான தகவல்களை நிர்வாகத்திற்கு கணக்கியல் வழங்குகிறது.

v) **கட்டுப்பாடு :**

கணக்கியல் ஒரு கட்டுப்பாட்டுக் கருவியாக இருப்பதால், கையாண்ட பல்வேறு வழிமுறைகள் குறித்த பலம் மற்றும் பல வீனங்களைக் கண்டறிந்து, கருத்து தெரிவிக்க முடிகிறது. மேலும், வணிக கொள்கைகள் மற்றும் திட்டங்கள் கடைபிடிக்கப்பட்டனவா என்பதை மதிப்பீடு செய்யும் கருவியாக இது பயன்படுகிறது.

**5. அகப் பயனீட்டாளர்களைப் பற்றி எழுதுக.**

**அகப் பயனீட்டாளர்கள் :**

அகப்பயனீட்டாளர்கள் என்பவர்கள் வணிக நிறுவனத்தின் உரிமையாளர்கள், நிர்வாகம் மற்றும் பணியாளர்கள் ஆவார்கள்.

i) **உரிமையாளர்கள் :**

வணிக நிறுவனத்தின் பயன்படுத்தப்படும் மூலதனத்தொகையை அளிப்பவர்களே உரிமையாளர்கள் எனப்படுகின்றனர்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



ii) **நிர்வாகம் :**
பெரும்பாலான முடிவுகளை நிர்வாகம் எடுப்பதற்கு கணக்கியலின் விவரங்கள் அடிப்படையாக இருக்கின்றன.

iii) **பணியாளர்கள் :**
பணியாளர்கள் தங்களது ஊதியம் பணியாற்றும் சூழ்நிலைகள், ஓய்வு பலன்கள் போன்றவற்றை நிர்ணயிக்கும் வணிகத்தின் இலாபம் ஈட்டும் திறன், வணிகத்தின் நிலைத்தன்மை மற்றும் வளர்ச்சி பற்றி அறிய ஆர்வமாக இருப்பார்கள்.

**6. புறப் பயனீட்டாளர்களைப் பற்றி எழுதுக.**

**புறப் பயனீட்டாளர்கள் :**
புறப் பயனீட்டாளர்கள் என்பவர்கள் நிறுவனத்திற்கு வெளியிலுள்ள நபர்கள், ஆனால், நிறுவனத்தின் கணக்கியல் விவரங்களை தங்களுடைய தேவைகளுக்கு ஏற்ப பயன்படுத்துபவர்கள் ஆவார்.

i) **முதலீட்டாளர்கள் :**
ஒரு நிறுவனத்தில் தங்களது நிதியை முதலீடு செய்யும் ஆர்வமுள்ள முதலீட்டாளர்கள், நிறுவனத்தின் நிதி நிலையை அறிந்து கொண்டு தங்களது முதலீட்டு முடிவுகளை எடுக்கின்றனர்.

ii) **வாடிக்கையாளர்கள் :**
வணிக நிறுவனங்கள் தயாரிக்கும் பொருள் மற்றும் சேவைகளை, வாங்கிப் பயன்படுத்தும் வாடிக்கையாளர்கள் அவற்றின் விவரங்கள் மற்றும் விலைகள் பற்றி அறிய விருப்பம் கொண்டுள்ளனர்.

iii) **கடனீந்தோர் மற்றும் நிதி நிறுவனங்கள் :**
பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குபவர்கள், வணிக வங்கிகள், பொது நிதி வைத்திருப்பவர்கள் மற்றும் கடனீட்டுப் பத்திரதாரர்கள் இப்பிரிவில் அடங்குவர்.

**7. குறிப்பு வரைக.**

1. **நடவடிக்கை :**
இது பணம் அல்லது பணமதிப்பு, ஒரு நபரிடம் இருந்து மற்றொருவருக்கு மாற்றம் செய்வதைக் குறிக்கும் ஒரு செயல்பாடு.

2. **முதல் :**
ஒரு நிறுவனத்தில், அதன் உரிமையாளர் செய்த முதலீட்டைக் குறிக்கும்.

3. **எடுப்புகள் :**
நிறுவனத்தின் உரிமையாளர், தன் சொந்தப் பயன்பாட்டிற்காக வணிகத்தில் இருந்து, ரொக்கம், சரக்குகள் மற்றும் சொத்துகள் போன்றவற்றை எடுத்துக் கொள்வதைக் குறிக்கின்றது.

4. **சான்றுச் சீட்டு :**
ஒரு வணிக நடவடிக்கைக்கு, ஆதாரமான எழுத்து வடிவிலான அல்லது அச்சிடப்பட்ட ஆவணம் சான்று சீட்டாகும்.

5. **சரக்கிருப்பு :**
வணிகத்தில் குறிப்பிட்ட நாளில் விற்கப்படாமல் உள்ள சரக்குகள் சரக்கிருப்பு ஆகும்.

6. **நொடிப்பு நிலை :**
ஒரு நபர் அல்லது நிறுவனம் தன் கடனைத் திருப்பிச் செலுத்த இயலாத நிலையைக் குறிக்கும்.

7. **பொறுப்பு :**
ஒரு வணிகம் பிறருக்கு செலுத்த வேண்டியவை பொறுப்பு எனப்படும்.

8. **வாராக்கடன் :**
   - ஒரு கடனாளி தன் கடன் தொகையைச் செலுத்த தவறுவதால் ஏற்படும் இழப்பாகும்.
   - இது திரும்ப பெற இயலாத கடனாகும்.

9. **கடனாளி :**
ஒரு பலனைப்பெற்று அதற்குரிய அல்லது பணத்தின் மதிப்பை, உடனே செலுத்தாமல் எதிர்காலத்தில் செலுத்த ஒப்புக்கொண்டால் அவர் "கடனாளி" என அழைக்கப்படுகிறார்.

10. **கடனீந்தோர் (கடனாளர்)**
ஒரு பலனைக் கொடுத்து அதற்குரிய பணம் அல்லது பணத்தின் மதிப்பை உடனே பெறாமல் எதிர்காலத்தில் பெற்றுக் கொள்ள ஒப்புக் கொண்டால் அவர் "கடனீந்தோர்" அல்லது "கடனாளர்" என அழைக்கப்படுகிறார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

அலகு **2**

# கணக்கியலின் கருத்துக் கட்டமைப்பு

## பகுதி I – புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. **வணிகத்தின் உரிமையாளர் இட்ட முதலிற்கு, வணிக நிறுவனம் கடன்பட்டிருக்கிறது என்பதை கூறும் கருத்து** GMQ - 2018 QY - 2018 மார்ச் -2019

அ) பண மதிப்பீட்டுக் கருத்து ஆ) அடக்கவிலை கருத்து

இ) வணிகத்தனித்தன்மை கருத்து ஈ) இரட்டைத்தன்மை கருத்து

**விடை : இ) வணிகத்தனித்தன்மை கருத்து**

2. **வணிகம் நீண்டகாலம் தொடர்ச்சியாக நடைபெறும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது.** QY - 2019 செப் -2020

அ) வணிக தனித்தன்மை கருத்து ஆ) நிறுவன தொடர்ச்சி கருத்து

இ) கணக்கியல் கால அனுமானம் ஈ) முன்னெச்சரிக்கை கொள்கை

**விடை : ஆ) நிறுவன தொடர்ச்சி கருத்து**

3. **GAAP என்பது.** First Mid - 2018 HY - 2019 மே -2022

அ) பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள்

ஆ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள்

இ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் வழிமுறைகள்

ஈ) இவற்றுள் ஏதுமில்லை

**விடை : ஆ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள்**

4. **இறுதி சரக்கிருப்பு, அடக்க விலை அல்லது விற்று ஈட்டக்கூடிய மதிப்பு இதில் எது குறைவோ அதனடிப்படையில் மதிப்பிடப்படும் என்ற கணக்கியல் கோட்பாடு.** HY - 2018 ஆகஸ்ட் -2022

அ) முக்கியத்துவ மரபு ஆ) பண மதிப்பீட்டுக் கருத்து

இ) முன்னெச்சரிக்கை மரபு ஈ) நிகழ்வு தீர்வு / கருத்து

**விடை : இ) முன்னெச்சரிக்கை மரபு**

5. **இந்தியாவில், கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு.** GMQ - 2018 First Mid-2018 QY-2018, 2019 HY - 2018 ஜூன் -2019 மார்ச் -2023

அ) இந்திய மைய வங்கி ஆ) இந்திய அடக்கவிலை மற்றும் கணக்காளர் நிறுவனம்

இ) உச்ச நீதி மன்றம் ஈ) இந்தியப் பட்டயக் கணக்காளர் நிறுவனம்

**விடை : ஈ) இந்தியப் பட்டயக் கணக்காளர் நிறுவனம்**

### II. மிகக் குறுகிய வினாக்கள்

1. **கணக்கேடுகள் பராமரிப்பை வரையறு.** GMQ - 2018 மார்ச் -2019

➢ ஜே.ஆர். பேட்லிபாய் அவர்கள் கூற்றுப்படி, “கணக்கு ஏடுகள் பராமரிப்பு என்பது, வணிக நடவடிக்கைகளை ஏடுகளில் பதிவு செய்யும் ஒரு கலையாகும்”.

➢ ஆர்.என் கார்ட்டர் அவர்களின் கூற்றுப்படி, “கணக்கேடுகள் பராமரிப்பு என்பது, பணம் அல்லது பணத்தின் மதிப்பிலுள்ள அனைத்து வணிக நடவடிக்கைகளையும் கணக்கேடுகளில் சரியாக பதிவு செய்யும் கலை மற்றும் அறிவியல் ஆகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. கணக்கியல் கருத்துக்கள் என்றால் என்ன?**

- கணக்கியல் முறையின் அடிப்படைக்காக, மேம்படுத்தப்பட்டு நிறுவப் பெற்ற அடிப்படை விதிமுறைகள் மற்றும் அனுமானங்கள், கணக்கியல் கோட்பாடுகள் (கருத்துக்கள்) எனப்படுகின்றன.
- இந்தக் கணக்கியல் கோட்பாடுகள், பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட **கணக்கியல் கோட்பாடுகள்** (GAAP) எனப்படும்.
  [GAAP ⇒ Generally Accepted Accounting Principles]
- கணக்கேடுகள் மற்றும் கணக்கியல் அறிக்கைகள் தயாரிக்கத் தேவையான அடிப்படை கட்டமைப்பை கணக்கியல் கோட்பாடுகள் வழங்குகின்றன.

**3. தீர்வு கருத்து பற்றி சுருக்கமாக விவரிக்க.**

- ஒரு சொத்தின் மதிப்பில் ஏற்படும் மாற்றம், அச்சொத்துக்கள் வணிகத்தால் தீர்வு செய்யப்படும் போது மட்டுமே பதிவு செய்யப்படும்.
- புராதன அடக்கவிலையில், சொத்துக்கள் பதிவு செய்தால், சொத்தின் மதிப்பில் ஏற்படும் மாற்றம் அச்சொத்து தீர்வு செய்யும்போது மட்டுமே கணக்கில் கொண்டு வரப்படவேண்டும்.

**4. கணக்கியலில் முழு வெளியீட்டு கொள்கை என்றால் என்ன?** HY - 2018 செப் -2020

- அனைத்து முக்கியத் தகவல்களும் நிதிநிலை அறிக்கை மூலமாக வெளிப்படுத்த வேண்டும் என்பதை இது வலியுறுத்துகிறது.
- பெரும்பாலான நிறுவனங்களில் நிர்வாகமும் உரிமையாளர்களும் வேறுபடுத்தபட்டு இருப்பதால், இந்த மரபு முக்கியத்துவம் பெறுகிறது.
- நிதி அறிக்கைகளின் வெளிப்பாடு முழுமையானதாகவும், நேர்மையானதாகவும், போதுமானதாகவும் இருத்தல் வேண்டும்.

**5. நிலைத்தன்மை மரபு குறித்து சிறு குறிப்பு வரைக.**

- கணக்கியல் கொள்கையும், நடைமுறைகளும் தொடர்ச்சியாக ஒரு கணக்காண்டிலிருந்து மற்றொரு கணக்காண்டிற்கும் பின்பற்றப்படும் என்பதை இம்மரபு தெரிவிக்கிறது.
- ஒரே விதமான கணக்கியல் கொள்கைகள் பின்பற்றப்பட்டால்தான் வெவ்வேறு ஆண்டுகளின் முடிவுகளை ஒப்பீடு செய்யமுடியும்.
- உதாரணமாக, ஒரு நிறுவனம், நிலைச்சொத்து வாங்கியதிலிருந்தே நேர்க்கோட்டு தேய்மான முறையைப் பின்பற்றினால், தொடர்ச்சியாக அதையே பின்பற்ற வேண்டும்.
- இருப்பினும், இதனை மாற்றம் செய்யவே முடியாது எனப்பொருள் கொள்ள முடியாது.

## III. குறுகிய வினாக்கள்

**1. பொருத்துகை கருத்து என்றால் என்ன? ஏன் ஒரு வணிக அமைப்பு இக்கருத்தைப் பின்பற்ற வேண்டும்?** QY - 2019

- ஒரு குறிப்பிட்ட கணக்காண்டில் ஈட்டிய வருவாய் அவ்வருவாயை ஈட்ட அவ்வாண்டில் செய்த செலவுகளோடு ஒப்பிடப்படுவதை இது குறிக்கும்.
- இது நிகழ்வுத் தீர்வு கருத்து, மற்றும் கணக்கியல் காலக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டதாகும். கணக்கியல் காலக்கருத்து, நிறுவனத்தின் திறனை அளவிடவும் மற்றும் நிதி நிலையை தீர்மானிப்பதற்குமான காலக்கெடுவை நிர்ணயிக்கிறது.
- குறிப்பிட்ட ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் அனைத்தும் கணக்கில் கொள்ளப்பட வேண்டும் என்பதையும் இது குறிக்கின்றது.
- மேற்கண்ட காரணத்தாலேயே, ஒரு வணிக அமைப்பு பொருத்துகை கருத்தை பின்பற்ற வேண்டும் என சொல்லப்படுகின்றது.

**2. 'பணம் சார்ந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்கியலில் பதியப்படுதல் வேண்டும்' – விவரி.** GMQ - 2018 மார்ச் -2023

- பணமதிப்பீட்டுக் கருத்தின்படி, எந்த நடவடிக்கைகளைப் பணத்தால் அளவிடமுடியுமோ, அந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்குகளில் பதியப்பட வேண்டும் என்பதைக் குறிக்கிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- பணமானது, பரிமாற்றத்தின் ஊடகமாக விளங்குவதால், பணத்தால் அளவிடக்கூடிய நடவடிக்கைகள் பதிவு செய்யப்படுகின்றன.
- பணம் ஒரு பொதுவான அளவீடாக இருப்பதால், பலதரப்பட்ட வணிக விவரங்களை அதன் மூலம் பதிவு செய்யமுடிகிறது.
- உதாரணமாக, ஒரு நிறுவனம், நாற்காலிகள் வாங்கியது ₹1,500 என்பதை, பண மதிப்பில் குறிப்பிடப்படவில்லையெனில், அச்சொத்துகளைக் கூட்டுவது பயனுள்ள தகவலாக இருக்காது.

**3. 'ஒரு வணிக நிறுவனம் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும்' - இந்த வாக்கியத்தை அடிப்படையாகக் கொண்ட கணக்கியல் கருத்தை விளக்குக.**

- ஒரு வணிக தொடர்ச்சியாக நடைபெற வேண்டும் - இந்த வாக்கியத்தை அடிப்படையாகக் கொண்ட கணக்கியல் கருத்து, நிறுவனத் தொடர்ச்சி கருத்து ஆகும்.
- இக்கருத்தின் அடிப்படையில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை மதிப்பீடு செய்தல், செலுத்திய செலவுகள், பெற வேண்டிய மற்றும் கூடியுள்ள வருமானம் முன்கூட்டிக் கணக்கியல் வழிமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- சொத்துக்களின் மதிப்பில் உண்டாகும் குறுகிய கால ஏற்ற இறக்கங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவது இல்லை.

**4. கணக்கியல் தரநிலைகள் குறித்து சிறு குறிப்பு வரைக.**

- கணக்கியலில் பின்பற்றப்பட வேண்டிய கட்டமைப்பையும் விதிகளையும் கணக்கியல் தரநிலைகள் தருவதால், வெவ்வேறு நிறுவனங்களின் நிதிநிலை அறிக்கைகளை ஒப்பீடு செய்ய முடிகிறது.
- நிதிநிலை அறிக்கை தயார் செய்வதில், நிலைத்தன்மை, ஒப்பீட்டுதன்மை நிறைவுத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையான உறுதிப்படுத்துவதற்கு கணக்கியல் கோட்பாடுகளை தர நிர்ணயம் செய்வது அவசியமாகிறது.
- கணக்கியல் தரநிலைகள் என்பது, கணக்கியல் நடவடிக்கைகள் மற்றும் நிகழ்வுகளை அடையாளம் கண்டு, அளவிட்டு பதிவு செய்து, தகவல்களை நிதி அறிக்கை வாயிலாக வெளிப்படுத்துவதற்காக கணக்கியல் வல்லுநர் குழு அல்லது அரசு அல்லது பிற ஒழுங்காற்று அமைப்புகளால் வெளியிடப்படும் கொள்கை ஆவணங்களாகும்.

**வரைவிலக்கணம் :**

- கோஹ்லர் என்பவரின் கூற்றுப்படி, "பொதுக் கணக்காளர் மற்றும் கணக்காளர்களின் நலனுக்காக வழங்கும் சட்டம் மற்றும் தொழில்சார் அமைப்புகளால் பொதுவாக உருவாக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளே கணக்கியல் தரநிலைகளாகும்."

## பகுதி II - கூடுதல் வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்

**1. .................. மரபின்படி பயனீட்டாளர்கள் முடிவெடுக்கப் பயன்படும் அனைத்துத் தகவல்களையும் வெளிப்படுத்துவதாக இருக்கவேண்டும்.**

அ) முக்கியத்தன்மை ஆ) முன்னெச்சரிக்கை
இ) முழுவெளிப்படுத்தல் ஈ) நிலைத்தன்மை **விடை : அ) முக்கியத்தன்மை**

**2. கணக்கியலின் ஆதாரத் தூண்களாக விளங்குபவை .............**

அ) எதிர்பார்க்கும் நட்டங்கள் ஆ) கணக்கியல் கருத்துக்கள்
இ) நிறுவனத் தொடர்ச்சி ஈ) அடிப்படை அனுமானங்கள்

**விடை : ஈ) அடிப்படை அனுமானங்கள்**

**3. இரட்டைத்தன்மை கருத்துப்படி ஒவ்வொரு நடவடிக்கையும் ............ தன்மையுடையது.**

அ) ஒரு ஆ) இரு இ) மூன்று ஈ) பல

**விடை : ஆ) இரு**

**4. வணிக நடவடிக்கைகளில் .............. நடவடிக்கைகள் மட்டுமே கணக்கியலில் பதியப்படும்.**

அ) அறிவியல் சார்புடைய ஆ) பொருளாதார சார்புடைய
இ) நிதிச் சார்புடைய ஈ) பொதுவான சார்புடைய

**விடை : இ) நிதிச் சார்புடைய**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## II. பொருத்துக.

1. **பட்டியல் I உடன் பட்டியல் II ஐப் பொருத்துக.**

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| i | நிறுவனத் தொடர்ச்சிக் கருத்து | 1 | நிறுவனம் நீண்டகாலமாகச் செயல்படல் |
| ii | இரட்டைத் தன்மைக் கருத்து | 2 | ரொக்க இரசீது மற்றும் இடாப்பு |
| iii | பொருத்துகைக் கருத்து | 3 | பற்றுத்தன்மை மற்றும் வரவுத்தன்மை |
| iv | உண்மை ஆதாரக்கருத்து | 4 | வரவு - செலவு ஒப்பிடல் |

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| அ) | 1 | 3 | 4 | 2 |
| ஆ) | 2 | 3 | 4 | 1 |
| இ) | 3 | 4 | 2 | 1 |
| ஈ) | 4 | 3 | 2 | 1 |

**விடை : அ) (i) 1, (ii) 3, (iii) 4, (iv) 2**

2. **பட்டியல் I உடன் பட்டியல் II ஐப் பொருத்துக.**

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| i | முன்னெச்சரிக்கை கருத்து | 1 | நடத்தையும் கருத்தில் கொள்ளவேண்டும் |
| ii | நிகழ்வுத் தீர்வுக்கருத்து | 2 | ஈட்டியன வருவாய் மட்டும் |
| iii | வருவாய் தீர்வு கருத்து | 3 | நிகழும் அடிப்படை |
| iv | நிலைத்தன்மை கருத்து | 4 | நடைமுறைகள் தொடர்ந்து பின்பற்றுதல் |

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| அ) | 1 | 3 | 2 | 4 |
| ஆ) | 4 | 3 | 2 | 1 |
| இ) | 3 | 4 | 1 | 2 |
| ஈ) | 2 | 4 | 1 | 3 |

**விடை : அ) (i) 1, (ii) 3, (iii) 2, (iv) 4**

## III. கூற்று மற்றும் காரணம்

1. **கூற்று (A) : இரட்டைத் தன்மைக் கருத்தின்படி ஒவ்வொரு நடவடிக்கையும் அல்லது நிகழ்வும் இரண்டு தன்மைகளைக் கொண்டிருக்கும்.**

**காரணம் (R) : ஒவ்வொரு பற்றுத் தன்மைக்கும் நிகரான வரவுத்தன்மை இருப்பதை உணர்த்துகிறது.**

அ) (A) மற்றும் (R) சரி (R) என்பது (A) என்பதன் சரியான விளக்கம்.

ஆ) (A) மற்றும் (R) சரி (R) என்பது (R) என்பதன் தவறான விளக்கம்.

இ) (A) சரி (R) தவறு

ஈ) (A) தவறு(R) சரி **விடை : அ)(A) மற்றும் (R) சரி (R) என்பது (A) என்பதற்கு சரியான விளக்கம்**

## IV. மிகக் குறுகிய வினாக்கள்

1. **கணக்கேடுகள் பராமரிப்பின் பொருள் தருக.**

➢ கணக்கேடுகள் பராமரிப்பு என்பது கணக்கு ஏடுகளில் நிதி நடவடிக்கைகளைப் பதிவு செய்யும் ஒரு செயல்முறை. இதுவே, கணக்கியலின் முதன்மை செயல்முறையாகும்.

➢ இது, நடவடிக்கைகளில் பதிதல் மற்றும் தலைப்புக்கேற்றவாறு வகைப்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. கணக்கியல் என்றால் என்ன?**

- கணக்கியல் என்பது கணக்குப்பதிவியலின் ஒரு பகுதியாகும்.
- கணக்கியல் என்பது நிதித் தகவல்களை பதிவு செய்தல், வகைப்படுத்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் உய்த்துணர்தல் போன்ற செயல்களைக் கொண்டதாகும்.

**3. கணக்குப் பதிவியல் என்றால் என்ன?**

கணக்குப் பதிவியல் என்பது, கணக்கியல் செயல்முறையின் முறையான அறிவு மற்றும் தரங்கள், கோட்பாடுகள், கொள்கைகள், வழிமுறைகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

**4. கணக்கியல் தரநிலையின் இலக்கணம் தருக.**

கோஹ்லர் என்பவரின் கூற்றுப்படி, பொதுக் கணக்காளர் மற்றும் கணக்காளர்களின் நலனுக்காக, வழங்கும் சட்டம் மற்றும் தொழில்சார் அமைப்புகளால் பொதுவாக உருவாக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகள் கணக்கியல் தரநிலைகளாகும்.

**5. பன்னாட்டு நிதி அறிக்கை தரநிலைகள் குறிப்பு வரைக.**

- பன்னாட்டு நிதி அறிக்கை தரநிலைகள் (IFRS) பன்னாட்டு கணக்கியல் தரநிலை வாரியத்தால் (IASB) வழங்கப்படுவதாகும்.
- இது பன்னாட்டு தரநிலைகளின் தொகுப்பு, இது குறிப்பிட்ட நடவடிக்கை மற்றும் பிறநிகழ்வுகள் எவ்வாறு நிதிநிலை அறிக்கையில், அறிக்கையிடப்பட வேண்டும் என்பதை விளக்குகிறது.

## V. குறுகிய வினாக்கள்

**1. கணக்கேடுகள் பராமரிப்பிற்கும் கணக்கியலுக்கும் இடையேயான வேறுபாடுகள் யாவை?**

First Mid - 2018

| வ.எண் | வேறுபாட்டிற்கான அடிப்படை | கணக்கேடுகள் பராமரிப்பு | கணக்கியல் |
|---|---|---|---|
| 1 | செயல் பரப்பு | வணிக நடவடிக்கைகளை பதிவு செய்தல் மற்றும் வகைப்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது ஆகும் | நிதித் தகவல்களை கணக்கேடுகளில் பதிவு செய்தல், வகைப்படுத்துதல் பகுப்பாய்வு மற்றும் உய்த்துணர்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது. |
| 2 | நிலை | கணக்கேடுகள் பராமரிப்பு கணக்கியலின் தொடக்க நிலையாகும் | இது தொடக்க நிலை மட்டுமின்றி இரண்டாம் நிலையான பகுப்பாய்வு மற்றும் உய்த்துணர்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது. |
| 3 | பணி இயல்பு | இது வழக்கமான மற்றும் எழுத்தர் பணி தன்மை கொண்டது. | இது பகுப்பாய்வு தன்மை கொண்டது. |
| 4 | தேவையான அறிவு | இதற்கு குறிப்பேட்டில் பதிவு செய்தல் எடுத்தெழுதுதல் சார்ந்த அடிப்படை அறிவு தேவைப்படுகிறது. | கணக்கியல் பதிவுகளை மேற்கொள்ள கணக்கியல் விதிமுறைகள், செயல் முறைகள் மற்றும் நடைமுறைகள் சார்ந்த முழுமையான அறிவு தேவைப்படுகிறது. |
| 5 | தேவையான அறிவு | பகுப்பாய்வு திறன் கணக்குகான பராமரிப்பிற்கு தேவையில்லை | கணக்கியலுக்கு பகுப்பாய்வு திறன் தேவைப்படுகிறது. |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. கணக்கியல் தரநிலைகளின் தேவைகள் யாவை?**

i) நிதிநிலை அறிக்கைகளை நன்கு புரிந்து கொள்வதற்கு

ii) கணக்காளர், ஒரே மாதிரியான செயல்முறைகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு.

iii) இரண்டு மற்றும் அதற்கு மேற்பட்ட வணிக அமைப்புகளின் நிதிநிலை அறிக்கைகளை பயன்தருமுறையில் ஒப்பீடு செய்வதை எளிதாக்குவதற்கு

iv) நிதிநிலை அறிக்கையின் நம்பகத்தன்மையை அதிகரிப்பதற்கு

v) சட்டத் தேவைகளை சிறப்பாக நிறைவேற்றுவதற்கு.

**3. கணக்கேடுகள் பராமரிப்பின் இயல்புகள் யாவை?** First Mid - 2018

i) இது வணிக நடவடிக்கைகளை கணக்கேடுகளில் பதிவு செய்தவற்கான செயல்முறை ஆகும்.

ii) பண மதிப்பிலான நடவடிக்கைகள் மட்டுமே இதில் பதியப்படுகின்றன.

iii) கணக்கேடுகளின் பராமரிப்பே, கணக்கியல் செயல்பாட்டின் முதன்மைநிலை ஆகும்.

iv) குறிப்பேட்டில் பதிதல் மற்றும் பேரேட்டில் எடுத்தெழுதுதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.

**4. கணக்கேடுகள் பராமரிப்பின் நோக்கங்கள் யாது?**

i) அனைத்து வணிக நடவடிக்கைகளையும் காலவரிசைப்படி உரிய தலைப்புகளில் பதிவு செய்து முழுமையான மற்றும் நிலையான ஆவணங்களாக வைத்திருத்தல்.

ii) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வணிகத்தின் இலாபம் அல்லது நட்டத்தைக் கணக்கிட உதவுதல்.

iii) நிதி நிலையை அறிய உதவுதல்

iv) வணிக வளர்ச்சியை அறிதல்

v) செலுத்தவேண்டிய வரியினைக் கண்டறிதல்

vi) சட்டத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்

**5. கணக்கேடுகள் பராமரிப்பின் நன்மைகளை விவரி.** QY - 2019

i) நடவடிக்கைகள் அனைத்தும் முறையாக காலவரிசைப்படி கணக்கேடுகளில் பதியப்படுகின்றன. இதனால் அனைத்து வணிக நடவடிக்கைகளுக்கும் கணக்கு ஏடு பராமரிப்பு நிரந்தரமான மற்றும் நம்பகத் தன்மையுள்ள ஆவணங்களை அளிக்கிறது.

ii) நிதித் தகவல்கள் பெற உதவுகிறது.

iii) அனைத்து வணிக செயல்பாடுகளையும் கட்டுப்படுத்த உதவுகிறது.

iv) நீதிமன்ற வழக்குகளில், சட்டப்படியான சான்றாக இதனை ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

v) நிதி தகவல்களை வேறு வணிக நிறுவனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடிகிறது.

vi) செலுத்தவேண்டிய வரியினைக் கண்டு பிடிக்க பயனுள்ளதாக இருக்கிறது.

**6. கணக்கேடுகள் பராமரிப்பின் குறைபாடுகள் யாவை?**

➢ பணமதிப்பிலான நடவடிக்கைகள் மட்டும் பதியப்படுகின்றன.

➢ கடந்த கால நிதி விபரங்கள் மட்டுமே பதியப்படுகின்றன.

**7. நிறுவன தொடர்ச்சி அனுமானம் குறித்து சிறு குறிப்பு வரைக.** மார்ச் -2023

➢ இது ஒரு அடிப்படை கருத்து இதன்படி, ஒரு வணிக நிறுவனம் தொடரக்கூடியது மற்றும் நீண்ட காலத்திற்கு தொடர்ந்து செயலாற்றும் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையிலேயே நடத்தப்பட்டு வருகிறது.

➢ இக்கருத்தின் அடிப்படையில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை மதிப்பீடு செய்தல், நிலைச்சொத்தின் மீதான தேய்மானம், கொடுபட வேண்டிய மற்றும் முன்கூட்டிச் செலுத்திய செலவுகள், பெற வேண்டிய மற்றும் கூடியுள்ள வருமானம் போன்றவைகளின் கணக்கியல் வழிமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# அலகு 13 தனியாள் வணிகரின் இறுதிக் கணக்குகள் - II

## பகுதி I - புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. **முன் கூட்டிச் செலுத்திய காப்பீட்டு முனைமம் தோன்றுவது** மார்ச் -2023
   அ) வியாபாரக் கணக்கில் பற்றுப் பக்கம் ஆ) இலாப நட்டக் கணக்கில் வரவுப் பக்கம்
   இ) இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கம் ஈ) இருப்புநிலைக் குறிப்பின் பொறுப்புகள் பக்கம்
   **விடை : இ) இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கம்**

2. **நிகர இலாபம்** மார்ச் -2019 HY - 2019
   அ) முதல் கணக்கில் பற்று வைக்கப்படும் ஆ) முதல் கணக்கில் வரவு வைக்கப்படும்
   இ) எடுப்புகள் கணக்கில் பற்று வைக்கப்படும் ஈ) எடுப்புகள் கணக்கில் வரவு வைக்கப்படும்
   **விடை : ஆ) முதல் கணக்கில் வரவு வைக்கப்படும்**

3. **இறுதிச் சரக்கிருப்பு மதிப்பிடப்படுவது.** ஜூன் -2019
   அ) அடக்க விலையில்
   ஆ) சந்தை விலையில்
